சார்பு நீதிமன்றம், அவிநாசி

**OS No. 15/2015**

**நாள் : 21.11.2023**

**PW1 : ரத்தினம் (எ) கனகரத்தினம் க/பெ. துரைசாமி**

**3-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நான் 11 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஓரளவுக்கு ஆங்கிலம் தெரியும். எனக்கு 1977 ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. திருமணம் ஆனதிலிருந்து கணவருடன் வசித்து வருகிறேன். கருப்பண்ண கவுண்டரின் தகப்பனார் பெயர் முத்துசாமி கவுண்டர் என்றால் சரிதான். முத்துசாமி கவுண்டர் இறந்து 45 ஆண்டுகள் இருக்கும் என்றால் இருக்கலாம். முத்துசாமி கவுண்டரின் மனைவி பெயர் கருப்பாயம்மாள். முத்துசாமி கவுண்டருக்கு 4 பெண் மக்கள், 1 ஆண் மகன் ஆவார். அவர்தான் என் தந்தை. 1941 ஆம் ஆண்டு என் தகப்பனார் மைனராக இருக்கும்போது, கிரையம் பெற்ற சொத்துதான் எங்கள் குடும்ப சொத்து என்றால் இருக்கலாம். என் தகப்பனாருக்கு கிரைய வகையில் வந்த சொத்துக்கள்தான் குடும்ப சொத்துக்கள் என்றால், என் தாத்தாவின் சொத்துக்களும் உள்ளன. என் தாத்தா பெயரில் சொத்து இருந்ததற்கு ஆவணம் பார்க்கவில்லை.

2) 1941 ஆம் ஆண்டு கிரையப்படி வந்த சொத்துக்கள்தான் என் தகப்பனார் பெயரிலுள்ள வழக்கு சொத்துக்கள் என்றால் நான் அப்போது பிறக்கவில்லை. என் தகப்பனார் நல்ல உழைப்பாளி என்றால் சரிதான். ஆரம்பத்தில் என் தந்தை கிராமம் கிராமமாக சென்று பருத்தி வாங்கி வந்து வியாபாரம் செய்வார் என்றால் சரிதான். என் தந்தை சிறிது காலம் பவர் லூம் தறி போட்டிருந்தார் என்றால் சரிதான். அப்போது மேற்படி தொழில் மூலமாக நிறைய வருமானம் கிடைத்தது என்றால் இருக்கலாம் அதை பற்றி எனக்கு தெரியாது. பனியன் கம்பெனி என் தந்தை வைக்கவில்லை. வழக்கு சொத்திற்கு வாய்க்கால் பாசனம் கிடையாது, கிணற்று பாசனம்தான். அடிக்கடி வறட்சி ஏற்பட்டு தென்னை மரங்கள் வரண்டு விட்டன என்றால் சரிதான். வறட்சி காலத்தில் குடிநீர் தட்டுப்பாடு இருந்தது என்றால் சரிதான். எங்கள் கிணற்றில் குடிநீர் இருந்தது.

3) என் தகப்பனார் எத்தனை ஏக்கர் கிரையம் பெற்றார் என்று எனக்கு தெரியாது, 3 ஏக்கர் இருக்கும். என் தந்தை கிரையம் பெறும்போது, எனக்கு 4,5 வயதிருக்கும். வியாபாரத்தில் கிடைத்த வருமானத்தை வைத்து என் தந்தை கிரையம் பெற்றார் என்றால் வியாபார வருமானமும், விவசாய வருமானம் இரண்டிலும், என் தாத்தா எனக்கு போட்ட நகைகளை விற்பனை செய்த வகையிலும் கிரையம் பெற்றார். என்னுடைய தரப்பில் தாத்தா நகை போட்டார் என்று சொல்லியுள்ளேனா என்றால் தற்போதுதான் சொல்கிறேன். என் தாத்தா எத்தனை சவரன் நகை போட்டார் என்று எனக்கு தெரியாது. என் தாயார் வழக்கு நிலுவையில் இருக்கும்போது இறந்துவிட்டார். 2012 ஆம் ஆண்டு என் தாயார் அம்மாணியம்மாள் யுவராஜ் மற்றும் மனோஜ் ஆகியோருக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு எழுதி வைத்திருந்தாலும் அது எங்களை கட்டுப்படுத்தாது.

K SURESH KUMAR

Digitally signed by K SURESH KUMAR
Date: 2023.11.21 17:26:16 +0530

4) என் தாயார், என் பெயரில் ஆவணம் எதுவும் எழுதவில்லை. என் தாயார் பெயரிலும் எந்த சொத்தும் இல்லை. என் தாயார் எந்த சொத்திலும் அனுபவத்திலும் இல்லை. அவர் விவசாயத்தில் ஈடுபடவில்லை. யுவராஜ், மனோஜ்குமார் மீது எனக்கு விரோதம் எதுவும் இல்லை. என் தம்பி மனைவி சிவகாமியுடனும் பேச்சு வார்த்தை நேசமாக உள்ளது. ஆனால், அவர்கள் மீதும் பங்கு கேட்டும் வழக்கு போட்டுள்ளேன். இந்த வழக்கை நடத்துவதற்கு சிவகாமி, யவராஜ் மற்றும் மனோஜ்குமார் ஆகியோர் எனக்கு ஆதரவாக உள்ளார்கள். என் பாகத்தில் அவர்கள் ஆட்சேபிக்கவில்லை. என் சகோதரர் செல்லமுத்து இறந்துவிட்டார். அவருடைய பாகத்தில், என் தாயாருக்கு பாத்தியம் உள்ளது. மேற்படி செல்லுமுத்தின் பாகம் கிடைக்கப்பெற்ற என் தாயார், செல்லமுத்தின் வாரிசுகள் பெயருக்கு ஆவணம் எழுதிவைத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 06.04.2009 தேதியில் ஏற்பட்ட பாகப்பிரிவினை பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு நடந்திருந்தாலும், அது என்னை கட்டுப்படுத்தாது.

5) 06.04.2009 பாகப்பிரிவினை குறித்து எனக்கு தெரியாது. அதனால், நான் வழக்குரையில் குறிப்பிடவில்லை. என்னிடம் காட்டப்படும் 30.09.2004 தேதியிட்ட உயில் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய தந்தையின் கையெழுத்து போலத்தான் உள்ளது. ஆனால், கையெழுத்து போடும் அளவிற்கு அவருக்கு மனநிலையும், உடல்நிலையும் இல்லை. என் தந்தை இறப்பதற்கு 6 மாதங்களுக்கு முன்பு உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். அதற்கு முன்ப நன்றாகத்தான் இருந்தார். 2004 ஆம் ஆண்டு நல்ல மனநிலையிலும், உடல்நிலையிலும்தான் என் தந்தை இருந்தார். பூர்வீக சொத்திலிருந்து வருமானம் வந்ததற்கான ஆதாரம் என்னிடம் இல்லை என்றால் சரிதான். என் தகப்பனார், 3-ம் பிரதிவாதியான எனது சகோதரன் வெங்கடாசலம் பெயரில் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்று வழக்கில் குறிப்பிட்டுள்ளேன். ஆனால், அது என்னை கட்டுப்படுத்தாது. அந்த சொத்தில்எ ன் சகோதரர் கட்டிடம் கட்டி, மின் இணைப்பு பெற்றுள்ளார் என்றால் சரிதான். நாங்கள் தடுத்தோம், ஆனால் அவர் கட்டிடம் கட்டிவிட்டார். அந்த சொத்தை வாடகைக்கு விட்டு, வாடகை பெற்று வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6) என் தகப்பனார் கிரையம் பெற்ற சொத்தை வங்கியில் வைத்து அடமானக்கடன் பெற்று, பணம் திருப்பி செலுத்தியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் சகோதரர் செல்லமுத்து குடிபழக்கம் உள்ளவர் என்றால் சரிதான். ஆனால், அதற்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை. தன் மகன் குடிப்பழக்கத்திற்கு ஆலானதால், என் தந்தை மன உளைச்சலில் இருந்தார் என்றால் சரிதான். என் தந்தை வெங்கடாசலத்தின் மீது அன்பாக இருந்தார் என்றால், மூன்று பேர் மீதும் பாசமாகத்தான் இருந்தார்.

K SURESH KUMAR

Digitally signed by K SURESH KUMAR
Date: 2023.11.21 17:26:22 +0530

**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS No. 15/2015</u>**

(**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது**).

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

K SURESH KUMAR

Digitally signed by K SURESH KUMAR
Date: 2023.11.21 17:26:28 +0530

Subordinate Judge,
Avinashi.